In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti

Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 181/2016 |
| PW: | 5 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 11-02-2026 நாள்: புதன் |
| பெயர்: | சிவனுத்தாய் |
| க/பெ: | குருசாமி |
| கிராமம்: | இனாம்மணியாச்சி |
| தாலுகா: | கோவில்பட்டி |
| வேலை: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| வயது: | 50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.02.2026**

(Accused A1 to A3 absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed).

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் தற்போது கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வந்தேன் கடந்த 21.04.2016 ம் தேதி 17.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது கோவில்பட்டி பாரதி நகர் – 3, மேற்கு தெருவை சேர்ந்த சத்திய ஜோதி மனைவி மஞ்சுளா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 274/2016. U/s. 448,294(b),323,354 IPC ஆக வழக்கு பதிவு செய்தேன்.(**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2) முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்மனுவினை இணைத்து நீதிமன்றத்திற்கும் அனுப்பி இதர நகல்களை உயர்அதிகாரிகளுக்கும்

அனுப்பி ஒரு நகலை  உதவி ஆய்வாளர் திரு. நவநீதன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

__எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை__

1) அ.சா.1 மஞ்சுளா கொடுத்த புகார் மனுவில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவமானது காலை 10.00 மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்ற பிறகு புகார் அளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது அதற்கு உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2) புகார்மனுவில்  3 வது எதிரி அசிங்கமாக பேசியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வர அரைமணி நேரம் ஆகும். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை  பதிவு  செய்த நேரம்  21.04.2016 மாலை 05.30 மணிக்கு என்றால் சரிதான்.

3) முதல் தகவல் அறிக்கையானது இந்நீதிமன்றத்திற்கு யார் மூலம் அனுப்பப்பட்டது என்று முதல் தகவல் அறிக்கையில் துலங்காது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை இந்நீதிமன்றத்தில் 22.04.2016 மதியம் 02.00 மணிக்கு தான் ஒப்படைக்கபட்டது என்றால் சரிதான்.

4) இந்த வழக்கில் அ.சா.1 ன் கணவர் காவல்துறையில் பணிபுரிந்து வருவதால் பின் யோசனையிட்டு பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அதனால் தான் காலதாமதம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன  நாள் நேரத்தில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.